குழந்தைகளுக்கு வேதாகமம்
வழங்குபவர்



# எலிசா, அற்புதங்களின் மனிதன்

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Lazarus

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.



கலப்பையை இழுக்க
போதுமான மாடுகள் அங்கே
இருக்கவில்லை. இன்னும்
ஒன்று தேவைப்பட்டது. அது
ஒரு வாலிப விவசாயியான
எலிசாவை நிறுத்தி
வைக்கவில்லை!



மாடு இல்லாத அந்த ஒரு இடத்தில், அவன் மாடுகளோடு சேர்ந்து கொண்டான். அவன் திடகாத்திரமான, கடின உழைப்பாளியாக இருந்திருக்க வேண்டும்.



கலப்பையை இழுக்க போதுமான மாடுகள் அங்கே இருக்கவில்லை. இன்னும் ஒன்று தேவைப்பட்டது. அது ஒரு வாலிப விவசாயியான எலிசாவை நிறுத்தி வைக்கவில்லை!



மாடு இல்லாத அந்த ஒரு இடத்தில், அவன் மாடுகளோடு சேர்ந்து கொண்டான். அவன் திடகாத்திரமான, கடின உழைப்பாளியாக இருந்திருக்க வேண்டும்.



எலியா சென்றுவிட்டதைக்
கண்டு எலிசா ஒருவேளை
துக்கப்பட்டாலும், எலியாவைப்
போல வல்லமை வேண்டுமென்று
அவன் விண்ணப்பம்
பண்ணினான்.



எலிசா எலியாவின் சால்வையை எடுத்துக்கொண்டு, எலியா செய்தது போல், ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றின் தண்ணீரை அடித்தான். அப்போது தண்ணீர் பிரிந்து நின்றது!

தேவன் தன்னோடு இருக்கிறார் என்று இப்போது எலிசாவுக்கு தெரிந்தது.



பெத்தேல் என்ற
ஊருக்கு எலிசா சென்று
கொண்டிருந்தபோது,
சில வாலிபப்
பிள்ளைகள்,
"மொட்டத்தலையா,
ஏறிப்போ!"
என்று கிண்டல்
பண்ணினார்கள்.
எலிசா ஒரு
தேவனுடைய
ஊழியக்காரன் என்று
அவர்கள் கவலை
கொள்ளவில்லை.



அதிர்ச்சியூட்டும் ஒரு காரியம் நடைபெற்றது. இரண்டு பெண் கரடி குட்டிகள் வனப் பகுதியிலிருந்து வந்து நாற்பத்திரண்டு வாலிபப் பிள்ளைகளை பீறிப்போட்டது.



தான் பட்ட
கடனை திரும்பக்
கொடுக்க முடியாமல்
கஷ்டப்பட்ட ஒரு
விதவையை
எலிசா ஒருநாள்
சந்தித்தான். கடன்
கொடுத்தவன்,
தன்னுடைய கடனை
திரும்பப் பெற, அந்த
விதவையின்
இரண்டு மகன்களை
அடிமைகளாக
எடுத்துக்கொள்ள
நினைத்தான்.



"போ, உன்னுடைய அக்கம் பக்கத்திலுள்ளவர்களிடமிருந்து வெறுமையான பாத்திரங்களை ... வாங்கு," என்று எலிசா சொன்னான். அந்தப் பெண்ணுக்கு தேவன் அற்புதமான ஒரு காரியத்தை செய்யப் போகிறார்.

அந்த விதைவையின் வீட்டில் ஒரு சிறிய சாடியில் எண்ணெய் மாத்திரம் இருந்தது. அந்த சிறிய சாடியிலிருந்து அவள் வைத்திருந்த பாத்திரங்களையெல்லாம் நிரம்ப ஊற்றினாள்! ஒருவேளை அந்த நாட்களில் முழுகும் தொட்டி இருந்திருந்தால், தேவன் அதைக்கூட நிரப்பியிருப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அந்த விதவை அந்த எண்ணெயை விற்று தன்னுடைய குமாரர்களை காப்பாற்றினாள்.



மற்றொரு ஸ்திரியும் அவளுடைய கணவனும் சேர்ந்து எலிசா வந்து போகிற சமயங்களிலே தங்குவதற்காக தங்களுடைய வீட்டிலே ஒரு விசேஷித்த அறையை உண்டுபண்ணினார்கள்.



அந்த அறையிலே, ஒரு கட்டில், ஒரு மேஜை, ஒரு நாற்காலி மற்றும் ஒரு விளக்குத்தண்டை வைத்தார்கள். அந்த அறை எலிசாவுக்காக எப்போதும் வைக்கப்பட்டிருந்தது.

அந்த தம்பதியர் காட்டின தயவுக்கு என்ன ஈடுசெய்யலாம் என்று எலிசா ஆலோசனை செய்தான். அவர்களுக்கு குழந்தை இல்லை என்று கேள்விப்பட்டு, அந்த பெண் நம்பமுடியாத ஒரு காரியத்தை எலிசா சொன்னான். "அடுத்தவருடம் இதே நேரத்தில், ஒரு குமாரனை அணைத்துக்கொள்வாய்," என்றான். நிச்சயமாகவே, ஒரு வருடத்திற்கு பின்னர், ஒரு குழந்தை பிறந்தது.



சில வருடங்களுக்குப் பின்னால் அதேக் குழந்தை தன்னுடைய தகப்பனுடன் வயல்வெளியில் இருந்தது. "என் தலை, என் தலை," என்று அந்தப் பையன் அழுதான்.



அந்தப் பையனை அவனுடைய தாயினிடம் கொண்டு வந்தபோது, அவளுடைய மடியில் மதியம் வரை இருந்து, பின்பு அவன் இறந்துபோனான். எலிசாவின் அறையிலுள்ள படுக்கையிலே அவனைக் கிடத்தினாள். அவளுக்கு யார் உதவி செய்ய முடியுமென நினைக்கிறீர்கள்?



எலிசா என்று நீங்கள் கூறினீர்களா? அது சரிதான்! அவள் ஒரு கழுதையின் மேல் சேணம் வைத்து ஏறி, வேகமாக அவனைக் கண்டுபிடிக்கச் சென்றாள். எலிசா அவளுடைய வீட்டிற்கு வந்து, தனியாக மேலறைக்குச் சென்று, ஆண்டவரை நோக்கி விண்ணப்பம்
பண்ணினான்.



தேவன் அந்தப் பையனின் உயிரை அவனுக்குள்ளே திரும்பக் கொண்டு வந்தார். எலிசா அந்தப் பெண்ணைக் கூப்பிட்டு, "உன் மகனை எடுத்துக்கொள்," என்றான். அவள் எவ்வளவு சந்தோஷமாக இருந்திருப்பாள்!





அருகாமையிலுள்ள
தேசமான சீரியாவிலே
நாகமான் என்றழைக்கப்பட்ட
படைத்தலைவன் ஒருவன்
இருந்தான். அவன் வல்லமையும்
பராக்கிரமனுமாயிருந்தும்,
பரிதாபமான தோல் வியாதியான
குஷ்டரோகம் அவனிடத்தில்
காணப்பட்டது.

இஸ்ரவேலிருந்து அடிமையாக
கொண்டு வரப்பட்ட ஒரு
சிறியப் பெண் நாகமானின்
மனைவியினிடத்தில் இருந்தாள்.
அந்தச் சிறுமி சொன்னாள்,
"இஸ்ரவேலில் இருக்கும்
தீர்க்கதரிசியினிடத்தில்
நாகமான் போவாரானால்!
நிச்சயமாகவே அவருடைய கு
ஷ்டரோகத்தை அவர்
சுகப்படுத்துவார்."



நாகமான் உடனே தீர்க்கதரிசியை காணப் புறப்பட்டுச் சென்றான். அவன் பரிசாக கொடுப்பதற்காக வெள்ளி, பொன் மற்றும் அழகான வஸ்திரங்களை கொண்டு சென்றான்.





எலிசாவின்
வேலைக்காரன்
வெளியே வந்து
சொன்னதாவது,
"நீ யோர்தான்
நதியிலே போய்
ஏழுமுறை
கழுவு நீ
சுத்தமடைவாய்."
நாகமான்
சீற்றமடைந்தான்.



அவன் கழுவிக்
கொள்வதற்கு சீ
ரியா தேசத்திலே
சுத்தமான நதிகள்
இல்லையா?
கோபத்துடன்,
தன்னுடைய
வீட்டிற்குத்
திரும்பிச் செல்ல
புறப்பட்டான்.



அதிர்ஷ்டவசமாக,
நாகமானின்
வேலைக்காரர்கள்
அவனை எலிசாவின்
கட்டளையிற்கு
கீழ்ப்படியும்படி
கேட்டுக்கொண்டார்கள்.
ஆகையால் நாகமான்
யோர்தான் நதிக்குச்
சென்று ஏழுமுறை
முழுகி எழும்பினான்.



அப்போது
நாகமானின்
குஷ்டரோகம்
சுகமாயிற்று!
எலிசாவின் தேவன்,
உண்மையான
தேவன் என்று
கூறி தன்னை கு
ஷ்டரோகத்திலிருந்து
சுகப்படுத்தின
அவரை வழிபட்டான்.



எலிசா இறந்தபின்
கூட தேவன் அவனை
உபயோகப்படுத்தினார்.
ஒருநாள், மரித்த ஒரு
மனிதனுடைய சடலமானது,
நீண்ட நாட்களுக்கு
முன்னால் எலிசா அடக்கம்
பண்ணிவைக்கப்பட்டிருந்த
அதே குகையில் அடக்கம்
பண்ணபட்டது.



மரித்த மனிதனுடைய
சரீரமானது எலிசாவின்
எலும்புகளை
தொட்டபோது, அவன்
உயிர் பெற்று, தன்னுடைய
கால் ஊன்றி நின்றான்.
உண்மையிலே,
தேவன் தன்னுடைய
பெரிய வல்லமையை
தன்னுடைய
உண்மையுள்ள
ஊழியக்காரனான
எலிசாவின் மூலம்
வெளிப்படுத்தினார்.

எலிசா, அற்புதங்களின் மனிதன்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

2 இராஜாக்கள் 2-13

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130


முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16